இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 97 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 01 – திங்கள்கிழமை 17 நவம்பர் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 97: Thiruvalluvar Year - 2056 - Karthigai 01 - Monday 17 November 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும், தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவு திட்டத்தை தொடங்கி வைத்து, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவினை வழங்கி அவர்களுடன் கலந்துரையாடினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும், தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவு திட்டத்தை தொடங்கி வைத்து, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவினை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, டாக்டர் மா. மதிவேந்தன், மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தூய்மைப் பணியாளர்களுக்கான ‘முதலமைச்சரின் உணவுத் திட்டம்’ டிச.6 முதல், அனைத்து மாநகராட்சி – நகராட்சிகளுக்கும் விரிவுபடுத்தப்படும்!

# தூய்மைப் பணியாளர் செய்வது வேலை அல்ல, சேவை!

## சென்னையில் திட்டத்தைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, நவ. 17 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, குடியிருப்புக்கான வீடுகள் மற்றும் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் உரையாற்றுகையில், “தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவுத் திட்டம் டிச.6 - முதல் அனைத்து மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் விரிவு படுத்தப்படும்” என்றும் “தூய்மைப் பணியாளர் செய்வது வேலை அல்ல, சேவை” என்றும் குறிப்பிட்டார்.**

முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு, குடியிருப்புகளுக்கான வீடுகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கக் கூடிய இந்த சிறப்பான நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கக்கூடிய, உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (15.11.2025) சென்னை, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியாற்றும், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும், தூய்மைப் பணியாளர்களுக்கான முதலமைச்சரின் உணவு திட்டத்தை தொடங்கி வைக்கும் விதமாக, தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு கொண்டு செல்லும் வாகனங்களை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, டாக்டர் மா.மதிவேந்தன், மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**மாநகரின் தூய்மைக்கு - கடுமையாக உழைக்கும் தூய்மைப் பணியாளர்களே காரணம்!**

தினமும் காலையில் விடிகின்ற போது நம்முடைய சென்னை, முந்தைய நாள் குப்பைகள் இல்லாமல், தூய்மையாக இருக்கிறது என்றால், அதற்குக் காரணம், இரவு முழுவதும் கடுமையாக உழைக்கின்ற, தூய்மைப் பணியாளர்களாக இருக்கக்கூடிய நீங்கள்தான்!

அப்படிப்பட்ட உங்களுக்கு உணவு வழங்கும் இந்த ‘முதலமைச்சரின் உணவுத் திட்டத்தை’ தொடங்கி வைப்பதில் நான் உள்ளபடியே பெருமை அடைகிறேன்!

என்னதான், சத்தான உணவு - டயட் - எக்சர்சைஸ் என்று இருந்தாலும், நாம் ஆரோக்கியமாக வாழ வேண்டும் என்றால், அதற்கு அடிப்படை என்னவென்று கேட்டால், தூய்மைதான்!

**பேரிடரிலிருந்து மக்கள் மீண்டிட தூய்மைப் பணியாளர்களின் தூய பணி!**

வெயில் மழை வெள்ளம் - புயல் என்று இந்த மாநகரம் எந்தப் பேரிடரை எதிர்கொண்டாலும், அதிலிருந்து மீண்டு வருவதில் உங்களுடைய பணிதான் மிக முக்கியமானதாக இருக்கிறது!

உங்களின் ஒப்பற்ற உழைப்பால் தான், நம்முடைய சுற்றுப்புறம் சுத்தமாக இருக்கிறது!

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

### தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை!

## தமிழ்நாட்டின் வட கிழக்கு, டெல்டா - கடலோர மாவட்டங்களில் கன மழைக்கு வாய்ப்பு!

### முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்!

*சென்னை, நவ.17 -* தென்மேற்கு வங்கக் கடலில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு காரணமாக தமிழ்நாட்டின் வட கிழக்கு, டெல்டா மற்றும் கடலோர மாவட்டங்களில் கன முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்பதால் மாவட்ட நிர்வாகம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

தென் இலங்கை மற்றும் அதனை ஒட்டிய தென் மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சியின் காரணமாக,

தமிழ்நாட்டில் கனமழை முதல் மிக கனமழைப் பொழிவு ஏற்படும் என இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள சிறப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்கள் விவரம் வருமாறு:-

17.11.2025 - கனமழை முதல் மிக கனமழை - காஞ்சிபுரம், விழுப்புரம். செங்கல்பட்டு, கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

கன மழை - சென்னை, திருவள்ளூர், கடலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிய இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

18.11.2025 - கனமழை - சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, இராணிப்பேட்டை விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.

19.11.2025 - கனமழை - கோயம்புத்தூர் மாவட்ட மலைப்பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ள நிலையில், தமிழ்நாடு அரசு உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களை அறிவுறுத்தியுள்ளது.

மேலும், மன்னார் வளைகுடா மற்றும் குமரி கடல் பகுதிகளில் சூறாவளி காற்று மணிக்கு 35 கி.மீ. முதல் 45 கி.மீ. வேகத்தில் வீசக்கூடும், இடை இடையே மணிக்கு 55 கி.மீ. வேகம் வரை காற்றின் வேகம் அதிகரிக்க கூடும் என்பதால் மீனவர்கள் மேற்குறிப்பிட்ட கடல் பகுதிகளில் மீன் பிடிக்க செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கனமழை எச்சரிக்கை வரப்பெற்றுள்ளதால், மாநில அவசர கால செயல்பாட்டு மையம் மூலம் நிலைமை தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

---

### பீகார் தேர்தல்:

## திடீரென 3 லட்சம் வாக்காளர்கள் உயர்வு!

### தேர்தல் ஆணையம் குளறுபடி! அதிர்ச்சி தகவல்!

*புதுடெல்லி, நவ. 17 -* பீகார் இறுதி வாக்காளர் பட்டியலுக்கும் தேர்தலுக்கு பிறகு தேர்தல் ஆணையம் வெளியிட்ட கணக்குகளில் குளறுபடி கண்டுபிடிக்கப்பட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. திடீரென 3 லட்சம் வாக்காளர்கள் உயர்ந்துள்ளது தெரியவந்துள்ளது.

243 சட்டமன்றத் தொகுதிகளைக் கொண்ட பீகார் மாநிலத்திற்கு இரண்டு கட்டங்களாக சட்டப் பேரவை தேர்தல் நடைபெற்றது.

பீகாரில் 75 ஆண்டு கால தேர்தல் வரலாற்றில் 67 சதவீத வாக்குகள் வாக்குகள் பதிவாகி சாதனை படைத்துள்ளாக தேர்தல் ஆணையம் தெரிவித்தது.

இந்நிலையில், பீகார் இறுதி வாக்காளர் பட்டியலுக்கும் தேர்தலுக்கு பிறகு தேர்தல் ஆணையம் வெளியிட்ட கணக்குகளில் குளறுபடி ஏற்பட்டுள்ளதால் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பீகார் சிறப்பு திருத்தம் செய்த பின்னர் இறுதி வாக்காளர் பட்டியலில் 7 கோடியே 42 லட்சம் வாக்காளர்கள் உள்ளதாக உள்ளதாக தெரிவித்த தேர்தல் ஆணையம், தேர்தலுக்கு பிறகு 7 கோடியே 45 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர் என்று தெரிவித்துள்ளது.

இறுதி வாக்காளர் பட்டியலை விட 3 லட்சம் வாக்காளர்கள் எண்ணிக்கை எப்படி உயர்ந்தது என்ற கேள்வி எழுந்துள்ளது.

66.91% பேர் வாக்களித்தனர் என்று தெரிவித்த தேர்தல் ஆணையம் எத்தனை வாக்காளர்கள் வாக்களித்தனர் என்பதை வெளிப்படையாக தெரிவிக்கவில்லை.

இறுதி பட்டியலை விட தேர்தலுக்குப் பிறகு எப்படி வாக்காளர் எண்ணிக்கை உயர்ந்தது என்ற கேள்வியை எதிர்க்கட்சிகள் எழுப்பி உள்ளன.